இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 24-07-2025

# தன்கர் விலகலின் பின்னணி!

ஜெகதீப் தன்கர் என்ற தனிமனிதருக்காக வருத்தப்பட ஏதுமில்லை. ஆனால் குடியரசுத் துணைத் தலைவருக்கே இந்தக் கதி தானா? என்பது வேதனை தரத்தக்கது ஆகும்.

இந்தியாவின் 14வது குடியரசுத் துணைத் தலைவராக 2022 ஆகஸ்ட் 11ஆம் தேதி ஜெகதீப் தன்கர் பதவி ஏற்றார். மூன்று ஆண்டுகளாக குடியரசுத் துணைத் தலைவராகப் பதவி வகித்து வந்த நிலையில், திடீரென அவர் தனது பதவியில் இருந்து விலகி இருக்கிறார். ‘2027 வரை நான் பதவியில் இருப்பேன்’ என்று சில நாட்களுக்கு முன்னால் சொன்னவர் அவர். ஆனால் திடீரென்று பதவி விலகல் கடிதத்தை, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு, ஜெகதீப் தன்கர் அனுப்பினார். மருத்துவக் காரணங்களுக்காக குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து விலகுவதாக தன்கர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் துணைத் தலைவர்தான், நாடாளுமன்ற மாநிலங்களவையை வழிநடத்தும் அவையின் தலைவராவார். பரபரப்பான அரசியல் சூழலில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21 ஆம் தேதி தொடங்கிய நிலையில், மாநிலங்களவையை ஜெகதீப்தன்கர் தான் வழிநடத்தினார். அப்போது நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்க நோட்டீஸ் தீர்மானம் தொடர்பான மனுக்களை அவரிடம் அனைத்துக்கட்சி எம்.பி.க்களும் வழங்கினர். இந்தச் சூழலில் பதவியில் இருந்து விலகுவதாக ஜெகதீப் தன்கர் திடீரென அறிவித்துள்ளார். மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாள் கூட்டம் முடிந்ததும் 21 ஆம் தேதியன்று அவர் பதவி விலகி இருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

**“அரசியல் அழுத்தம் காரணமாகவே ஜெகதீப் தன்கர் பதவி விலகியுள்ளார்” என்று மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு விமர்சித்துள்ளார்.**

**“தன்கரின் திடீர் விலகல் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அதிர்ச்சியளிக்கிறது. அன்றைய தினம் மதியம் ஒரு மணியளவில் நடந்த அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் ஒன்றிய அமைச்சர்கள் ஜே.பி.நட்டா, கிரண் ரிஜிஜூ ஆகியோர் பங்கேற்ற நிலையில், மாலையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் இருவரும் பங்கேற்கவில்லை. இந்த இடைப்பட்ட நேரத்தில் நடந்தது என்ன? 22 ஆம் தேதி மதியம் 1 மணிக்கு அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தை ஜெகதீப் தன்கர் ஏற்பாடு செய்திருந்தார். நீதித்துறை தொடர்பான சில முக்கிய அறிவிப்புகளையும் இன்று வெளியிடப்போவதாக தன்கர் கூறியிருந்தார். ஆனால், இரவோடு இரவாக ஜெகதீப் தன்கர் ராஜினாமா செய்திருப்பது புரியாத புதிராக உள்ளது” என்று கூறியுள்ளார் ஜெய்ராம் ரமேஷ்.**

நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்க தீர்மான நோட்டீஸ் விவகாரத்தில் பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரின் நெருக்கடியால் ஜெகதீப் தன்கர் பதவி விலகினாரா? என்பதே எதிர்க்கட்சிகள் எழுப்பும் சந்தேகம் ஆகும்.

டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டில் கட்டுக் கட்டாகப் பணம் கைப்பற்றப்பட்டது. இது உண்மை என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் விசாரணையும் உறுதி செய்தது. எனவே, அவரை பதவி நீக்கம் செய்ய அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்தி வருகிறார்கள். நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதவியில் இருந்து நீக்க 208 எம்.பி.க்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நீதிபதி பதவியில் இருந்து ஒருவரை நீக்க வேண்டுமானால் 100 மக்களவை உறுப்பினர்களும், 50 மாநிலங்களவை உறுப்பினர்களும் அந்த நோட்டீஸில் கையெழுத்துப் போட்டிருக்க வேண்டும்.

145 மக்களவை உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்ட நோட்டீஸ் மக்களவை தலைவர் ஓம்பிர்லாவிடம் தரப்பட்டது. 63 மாநிலங்களவை உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்ட நோட்டீஸ் குடியரசுத் துணைத் தலைவரும் மாநிலங்களவை அவைத் தலைவருமான ஜெகதீப் தன்கரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கையெழுத்திட்ட தீர்மானத்தைப் பெற்றதாக தன்கர் ஒப்புக்கொண்டார், அவர்களின் கையொப்பங்களைச் சரிபார்ப்பதாகவும் கூறினார். டெல்லி நீதிபதியை நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் விடுத்த தீர்மானத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார். விதிகளின்படி செல்வதைத் தவிர தன்கருக்கு வேறு வழிகள் இல்லை. ஆனால் இதனை பா.ஜ.க. தலைமை விரும்பவில்லை. இதுதான் தன்கர் பதவி விலகலுக்கு காரணமாக அமைந்து விட்டது.

**பா.ஜ.க.வின் பவர் பாலிடிக்ஸும் இதற்குப் பின்னணியாக உள்ளதாகச் சொல்லப்படுகிறது. 75 வயதை அடைந்தவர்கள் அரசியலில் இருந்தும் பதவியிலிருந்தும் ஓய்வு பெற வேண்டும் என ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன் பகவத் அண்மையில் பொதுவெளியில் பேசியிருந்தார். விரைவில் 75 வயதை நெருங்க உள்ள பிரதமர் மோடியை குறிப்பிட்டே மோகன் பகவத் பேசியதாக சர்ச்சை எழுந்தது. மோகன் பகவத்தின் பேச்சுக்கும், தற்போது ஜெகதீப் தன்கரின் பதவி விலகலுக்கும் தொடர்பு இருக்கிறது என்றும் டெல்லி தகவல்கள் சொல்கின்றன.**

ஜெகதீப் தன்கரின் பதவிக்காலம் 2027ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை இருந்தாலும், தற்போது அவருக்கு 74 வயதாகிறது. விரைவில் 75 வயதை எட்ட உள்ள பிரதமர் மோடிக்கு நெருக்கடி கொடுக்கவே, ஜெகதீப் தன்கரை ராஜினாமா செய்ய வைத்திருக்கிறது நாக்பூர் மேலிடம் என்றும் சொல்கிறார்கள்.

**எப்படிப் பார்த்தாலும் பா.ஜ.க. பூதம், ஜெகதீப் தன்கரை விழுங்கிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். குடியரசுத் துணைத் தலைவரையே அவர்கள் எந்தளவுக்கு மதித்துள்ளார்கள் என்பதும், எந்த வகையில் நடத்துகிறார்கள் என்பதும் இதன் மூலமாகத் தெரிகிறது. இந்திய மக்களாட்சி நெறிமுறைகளை காலில் போட்டு மிதித்து நசுக்கும் காட்சியாகவே தன்கரை துரத்தியதைப் பார்க்க வேண்டும்.**



வேலூர் மாவட்டம் காட்பாடி காந்திநகர் பகுதியில் ரூ.1.42கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள முழு நேர கிளைநூலக கட்டிடத்தை நீர்வளம் – சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். உடன் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், காந்திநகர் பகுதி செயலாளர் என்.பரமசிவம், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி கூட்டுறவு சங்க நகரமைப்பு தலைவர் தேவசுந்தரம், செயலாளர் மனோகரன், 14 வதுவட்ட செயலாளர் கெஜா, ஜெ.சி.பி.சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளில் – அவர் உருவாக்கிய

# சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப்பணி - சுற்றுலாப் பணிகள் மேற்கொள்ளப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 24 -

மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளில், அவர் உருவாக்கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகளும், சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படுவது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் எனப் பெரும்புகழ் எய்திய தமிழ் மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளான ஆடித் திருவாதிரையை அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாட 2021ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது நமது திராவிடமாடல் அரசு!**

**அவரது தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழப் பேரரசின் வரலாற்றுச் சிறப்புகளையும் கடல் கடந்த வணிகத் தொடர்புகளையும் பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்கப்படும் என அறிவித்து, அதற்கும் கடந்த ஜனவரி மாதம் அடிக்கல் நாட்டினேன். காண்போரைக் கவர்ந்திடும் வண்ணம் அது எழுந்து வருகிறது.**

**இவற்றின் தொடர்ச்சியாக, இராசேந்திர சோழனின் பிறந்த நாளில், அவர் உருவாக்கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகளும் - சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# நெற்குன்றம் பகுதியில் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டு ஆய்வு!

*சென்னை, ஜூலை 24-*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.07.2025) சென்னை, வளசரவாக்கம் மண்டலம், வார்டு 148, நெற்குன்றம், என்.டி.பட்டேல் சாலையில் உள்ள ஜி.எம்.மஹாலில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:*

**“உங்களுடன் ஸ்டாலின் முகாம்”**

*“உங்களுடன் ஸ்டாலின்” எனும் மகத்தான திட்டம் தமிழ்நாட்டின் வரலாற்றில் வீடு தேடி அரசு என்கின்ற வகையில் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஜூலை திங்கள் 15ஆம் தேதி சிதம்பரம் நகராட்சியில் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இந்த திட்டத்தில் மக்களைத் தேடி சென்று 10000 முகாம்களை நடத்தி அதில் ஊராட்சி பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள் என்கின்ற வகையிலும், நகராட்சிப் பகுதிகளில் 13 துறைகள் 43 சேவைகள் என்கின்ற வகையிலும் இந்த மகத்தான திட்டம் தொடங்கப்பட்டது. நகர்ப்புற பகுதிகளைப் பொறுத்தவரை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தித் துறை, கூட்டுறவு மற்றும் உணவு, நுகர்வோர் பாதுகாப்புத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைத் துறை என்று 13 துறைகளின் சார்பில் 43 சேவைகளை வழங்குகின்ற ஒரு மகத்தான திட்டம் தான் உங்களுடன் ஸ்டாலின் எனும் மகத்தான திட்டம். இந்த திட்டத்தின்படி 10000 இடங்களில் முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.*

*பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, 200 வார்டுகள் இருக்கின்றது. ஒவ்வொரு வார்டுகளுக்கும் இரண்டு என்கின்ற வகையில் இந்த முகாம்கள் திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்தவகையில் சென்னையைப் பொறுத்தவரை 400 இடங்களில் இந்த முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 400 இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முகாம்களைப் பொறுத்தவரை, ஜூலை திங்கள் 15 ஆம் தேதி முதல் இன்றைய தேதி வரை தினமும் 6 இடங்களில் பல்வேறு பகுதிகளில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஜூலை மாதத்தில் மட்டும் சென்னையில் 109 இடங்களில் முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.*

*முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை 10000 முகாம்கள் நவம்பர் இறுதிக்குள் நடத்தி முடித்திட வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அந்தவகையில் இந்த மாதம் 109 முகாம்களும், மீதமிருக்கும் முகாம்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் 100 என்கின்ற வகையில் முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. இந்த முகாம்களின் வாயிலாக நான் ஏற்கெனவே சொன்ன துறைகளின் சார்பில் மனுக்கள் பெறப்பட்டு அதற்கான தீர்வு காணப்படவிருக்கிறது. நேற்று மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நெற்குன்றம் பகுதியில் இந்த முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காலையிலிருந்து ஏராளமான பேர் இந்த முகாமில் கலந்துக் கொள்வதற்கு வந்திருக்கிறார்கள். இந்த முகாமினைப் பொறுத்தவரை ஒரு வார காலத்திற்குள் முன்பாகவே எங்கு இந்த முகாம் நடைபெறுகிறதோ அந்த முகாம் சுற்றியிருக்கும் பகுதியில் தன்னார்வலர்கள் வீடு வீடாகச் சென்று முகாம்கள் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களுக்கு தெரிவிக்கிறார்கள். மிகச் சிறப்பான வகையில் பொதுமக்களுக்கு இந்த திட்டம் சென்றிருக்கும் காரணத்தினால் ஏராளமான பேர் பயன் பெற்றிருக்கிறார்கள்.*

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகை**

*கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின்படி, இன்றைக்கு அந்த திட்டத்திற்கு 10க்கும் மேற்பட்ட கவுண்டர்கள் போடப்பட்டுள்ளது. மேலும் மனுக்களை பூர்த்தி செய்து தருவதற்கு ஏராளமான தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மனுக்களை பூர்த்தி செய்வதற்கு இடைத்தரகர்கள் யாரும் இருக்க கூடாது என்கின்ற வகையிலேயே பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த தன்னார்வலர்கள் இந்த மனுக்களை பூர்த்தி செய்து மக்களுக்கு உதவும் வகையில் உள்ளனர். ஆக இன்று ஒரே நாள் சென்னையில் 6 இடங்களில் முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.*

*இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் கா.கணபதி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதார் ரசூல், வளசரவாக்கம் மண்டலக்குழுத்தலைவர் நொளம்பூர் வெ. ராஜன், மாமன்ற உறுப்பினர் வி.கிரிதரன், மண்டல அலுவலர் பி.பானுகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று (23.07.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர் ராஜேந்திர ரத்னூ, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர் கே.விவேகானந்தன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.பி.மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.